அக்டோபர் 2022

இதழ் : 01

CHAMBER *of* COMMERCE & INDUSTRY, THANJAVUR.

தொழில் மற்றும் வர்த்தக சங்கம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர்
மாண்புமிகு ச.சு.பழநிமாணிக்கம் M.A., B.L., M.P.
அவர்களுடன் புதிய நிர்வாகக் குழுவினர்கள்

வணிக இதழ்

Journal of CHAMBER OF COMMERCE & INDUSTRY, THANJAVUR.

Lowest Interest Rate

State Bank of India
THE BANKER TO EVERY INDIAN

Mega Deals for Dealers.

Get Lowest Interest Rate, 100% Funding and Convenient Banking only with

SBI Dealer Financing Scheme

Electronic Dealer Financing Scheme

- **Purpose :** To provide finance to authorized dealers / stockiest / distributors recommended by industry Majors
- **Eligibility :** Dealers of industry Majors with whom the e-DFS tie-up is entered with
- **Amount of Facility :** Need based (As per tie-up)
- **Margin :** Nil (100% Funding)
- **Security :**
  - **Primary :** 100% Hypothecation of stocks financed and receivables
  - **Collateral :** Minimum 25% or Nil*
- Attractive Interest Rates **Charges :** Low Charges **Validity :** 12 Months

CONTACT DETAILS :

State Bank of India, SME Branch, Thanjavur, Kamalasubramaniam Arcade, Trichy Road, Thanjavur
+91-9445862515/9445860471/7094440257/7094440282

SBI for SME

Log on to www.sbi.co.in / https://sbiforsme.in or
call 1800 425 3800 & 1800 11 22 11 (Toll Free) / 080-26599990.
E-mail: leads.sme@sbi.co.in

Visit **https://sbiforsme.sbi.co.in** / Email: **leads.sme@sbi.co.in**

Follow us on:

Facebook	StateBankofIndia
YouTube	TheOfficialSBI
Twitter	@TheOfficialSBI
LinkedIn	statebankofindia

*Conditions apply

தலைவர் மடல்...

பழ. மாறவர்மன்
தலைவர்

மதிப்பிற்குரிய சங்க உறுப்பினர்களே!
உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

"பொன்னியின் மடல்" மூலம் சில பதிவுகளை உங்களிடம் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். புதிய நிர்வாகக்குழு பொறுப்பெடுத்து வரும் முதல் "பொன்னியின் மடல்" உங்கள் கரங்களில் வந்து சேரும் பொழுது ஏழு மாத காலங்கள் கடந்த நிலையில் நம் தஞ்சாவூர் தொழில் மற்றும் வர்த்தக சங்கம் உள்ளது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

இந்தத் தருணத்தில் நம் சங்க வளர்ச்சிக்காகப் பாடுபடும் உங்கள் அனைவருக்கும் மற்றும் வழி நடத்திச் செல்லும் முன்னாள் தலைவர்கள் திரு A.அழகப்பன் அவர்கள், திரு மெய்யப்பன் அவர்கள், திரு K.பத்மநாபன் அவர்கள், திரு M.தமிழய்யா அவர்கள், திரு PL.A.சிதம்பரம் அவர்கள், திரு V.S.வாசன் அவர்கள், திரு S.முகமது ரபீக் அவர்கள், Dr. S.P.S.அருள்தாஸ் அவர்கள், திரு N.T.பாலசுந்தரம் அவர்கள் மற்றும் என்னுடன் தோளோடு தோள் கொடுத்து இந்த இரு ஆண்டுகள் சிறப்பாகச் செயல்படுவதற்குத் துணை நிற்கும் செயற்குழு உறுப்பினர்களுக்கும் குறிப்பாகத் துணைத் தலைவர் திரு A.சுப்பிரமணியம் அவர்களுக்கும், செயலாளர் திரு A.குகனேஸ்வரன் அவர்களுக்கும், துணைச் செயலாளர் திரு R.சிவக்குமார் அவர்களுக்கும், பொருளாளர் திரு S.ஆசிப் அலி அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த இரண்டு ஆண்டுகள் 2022-2024 ஆம் ஆண்டுகள் சிறப்பாகத் செயல்படுவதற்கு எங்களை தேர்வு செய்த உங்களுக்கு எவ்வளவு நன்றிகள் சொன்னாலும் அதற்கு ஈடு இணையாகாது. நாங்கள் உங்களுக்கு எங்கள் நன்றிகளைத் தெரிவிப்பதோடு நல்ல முறையில் நம் தஞ்சாவூர் சேம்பர் ஆப் காமர்ஸ் அன்ட் இண்டஸ்ட்ரீஸ் நிர்வாகத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திக் காட்டுவோம் என்று உறுதிமொழி கொடுப்பதே சிறந்த செயல்பாடாகும்.

எப்படி நாம் வலிமையான பாரதம் என்று சொல்கிறோமோ அதேபோல நம் தஞ்சாவூரில் செயல்படும் தஞ்சாவூர் தொழில் மற்றும் வர்த்தக சங்கத்தைத் தமிழ்நாடு அளவில் ஒரு வலிமையான சங்கமாக உருவாக்க வேண்டும் என்பது என்போன்றோர் விருப்பம். அதற்கான செயல்பாடுகளில் புதிய செயற்குழு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம் வர்த்தக சங்கத்தின் ஏப்ரல் 1 ஆம் தேதியன்று வாழ்நாள் உறுப்பினர்கள் 466, வாழ்நாள் கார்ப்பரேட் உறுப்பினர்கள் 12 பேரும் மொத்தம் 478 உறுப்பினர்கள் இருந்தனர். இந்த ஆறு மாதக் கால இடைவெளியில் தஞ்சை நகரத்தில் சிறந்த தொழில் முனைவோர்கள் குறிப்பாக இளைஞர்களாகிய 24 உறுப்பினர்களை இணைத்து 502 உறுப்பினர்களாக்கினோம். புதிதாக இணைக்கப்பட்டுள்ள அனைத்து உறுப்பினர்களையும் வருக! வருக! என்று உங்கள் அனைவரின் சார்பாக வரவேற்கின்றேன். புத்துணர்வுடன் செயல்படும் இளைஞர்களாகிய புதிய உறுப்பினர்களுக்கு என் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதுவரை மாதந்தோறும் உறுப்பினர்கள் சந்திப்பு மற்றும் சிறப்புக்கூட்டம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஒவ்வொரு கூட்டமும் சிறப்பான, பயனுள்ள கூட்டம் என்பது உறுப்பினர்கள் கருத்து. நம் நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு.S.S.பழநி மாணிக்கம் அவர்கள், நம்முடைய தஞ்சாவூர் மாண்புமிகு அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள், திரு சதீஷ் கிருஷ்ணமூர்த்தி அவர்கள், திரு ஆனந்த் சீனிவாசன் அவர்கள், மாவட்ட ஆட்சியர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் அவர்கள் மற்றும் மாநகராட்சி ஆணையர் திரு K.சரவணக்குமார் அவர்கள் கலந்து கொண்டது நம் சேம்பர் வரலாற்றில் பெருமையான செய்தியாகும்.

என்னுடைய சில கடமைகள் என்ன வென்றால் அடிப்படை உறுப்பினர்களுடைய ஆவணங்களை ஆவணப்படுத்துதல் மற்றும் உறுப்பினர்கள் முகவரி பட்டியல் தயாரித்தல், அவர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல், உறுப்பினர்களுக்கு உண்டான லேபிள் பின் வழங்குதல் இவையெல்லாம் நிறைவேற்றித் தர வேண்டும் என்பது பெரிய விருப்பம். இந்த திட்டத்தில் நான்கில் மூன்று பங்கு உறுப்பினர்கள் எல்லாத் தகவல்களையும் தந்து உதவினார்கள். அதேபோல இன்னும் எஞ்சி நிற்பவர்கள் தங்கள் விவரங்களை விரைவில் தந்து உதவிட வேண்டுகிறேன்.

இந்தத் தருணத்தில் தஞ்சாவூர் தொழில் மற்றும் வர்த்தக சங்கத்தின் அழைப்பிதழ் அச்சிடுவதற்குப் பெரிதும் உதவி வரும் தனிஷ்க் ஜுவல்லரி நிறுவனத்தார்க்கும், திரு ஆனந்த் சீனிவாசன் அவர்களைச் சிறப்பு விருந்தினராக அழைத்து வருவதற்கு உதவிய அமேசிங் விளம்பரதாரர் திரு.மாரிமுத்து அவர்களுக்கும், வாட்ஸ் ஆப் குரூப் உருவாவதற்கு மிகுந்த முயற்சி எடுத்து உருவாக்கிய நம் உறுப்பினர் திரு. V.ரெத்தின சபாபதி அவர்களுக்கும், CCI முகநூல் மற்றும் website உருவாக்குவதற்குத் துணை நின்ற திரு யோகா ஸ்டீபன் அவர்களுக்கும் உங்கள் சார்பாகவும் என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிஷப் சுந்தரம் வணிக வளாகத்தில் நம் சேம்பர் அலுவலகம் அமைவதற்கு இடம் பெற்றுத் தருவதற்கு உதவி வரும் திரு.விஜய் அமல்ராஜ் அவர்களுக்கும் மற்றும் நம் நிர்வாகக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் மாணிக்கவேல் பாண்டியன் அவர்களுக்கும் நம் சங்கத்திற்கு உரிமையான இடத்தை மீட்டு தருவதற்காக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அதற்கான பணிகளைச் செய்வதற்காக என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம் சங்கத்தின் மூன்று உறுப்பினர்கள் முன்னாள் தலைவர் திரு வெங்கடாஜலம், திரு சுப்புராமன், திரு சுப்பையன் ஆகியோரின் பிரிவு - மறைவு மிகுந்த வருத்தத்தை தருகின்றது. அவர்கள் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனிடம் நாம் அனைவரும் பிரார்த்தனை செய்வோம்.

நண்பர்களே! ஒரு மகிழ்ச்சியான செய்தியினையும் உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். நம் சேம்பர் செயல்பாடுகளின் காரணமாகவும் நான் ஒரு தமிழ் ஆர்வலர் என்ற காரணத்தினால் தமிழக ஆளுநர் அவர்களால் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக மூன்றாண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளேன். இந்த நியமனம் நம் தஞ்சாவூர் சேம்பர் ஆப் காமர்ஸ் அன்ட் இண்டஸ்ட்ரீஸுக்கு கிடைத்த பெருமையாகும்.

அதேபோல ஒரு வருத்தமான செய்தியும் உங்களிடம் தெரியப்படுத்த வேண்டும். எதிர்பாராமல் 26.09.2022, திங்கட்கிழமை காலை 8.15 மணிக்கு என் வீட்டிற்கு மிக அண்மையில் சீனிவாசபுரம் இராஜாஜி சாலையைக் கடக்கும் பொழுது எதிர்பாராமல் ஒரு குறுக்கு சாலையில் வேகமாக வந்த ஒருவரால் வலக்காலில் எலும்பு முறிவி ஏற்பட்டு மருத்துவரால் சிகிச்சை பெற்று, இப்பொழுது சற்று நலமுடன் இருக்கிறேன் என்ற செய்தியினை உங்களிடம் பகிர்ந்து கொள்கின்றேன்.

அதனால்தான் நான் இந்த ஒரு மாதக் காலம் இரண்டு கூட்டங்களில் கலந்துகொள்ள இயலவில்லை. விரைவில் நலம் பெற்று உங்களைச் சந்திப்பேன். அதுவரை உங்கள் ஆதரவையும் ஒத்துழைப்பையும் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன். நன்றி.

இப்படிக்கு,

(பழ.மாறவர்மன்)

Views expressed herein are that of the individuals identified with them or are taken from publicly available information. CCI, Thanjavur shall not take any responsibility for these views. Wherever possible, necesary references of publicly available information in this newsletter have been made.

தஞ்சாவூர் தொழில் வர்த்தக சங்கத்தின் 2022-2024 ஆம் ஆண்டு நிர்வாகிகள்

தலைவர்
பழ. மாறவர்மன்
மாணிக்கம் பிரிண்டர்ஸ்

செயலாளர்
அ. குகனேஸ்வரன்
பட்டயக் கணக்காளர்

பொருளாளர்
எம்.எஸ். ஆசிப் அலி
மஹாராஜா ரெடிமேட்ஸ்

துணைத்தலைவர்
ஏ. சுப்ரமணியம்
அண்ணாமலை மோட்டார்ஸ், ரெனால்டு

இணைச்செயலாளர்
ஆர். சிவக்குமார்
D.B.S. ஏஜென்ஸிஸ்

ஆலோசனைக் குழு உறுப்பினர்கள்

A. ALAGAPPAN
BLOSSOM PUBLIC SCHOOL

N. MEYYAPPAN
GATEWAY COMMUNICATIONS

M. THAMIZHAIAH
CHARTERED ACCOUNTANT

T.G. VENKATACHALAM
SUNDARAM PAINTS

B. RAVIKUMAR
DBS AGENCIES

R. THIYAGARAJAN
KODI OF COMPANIES

PL.A. CHIDAMBARAM
PL.A. GROUP OF COMPAINES

K. PADAMANABHAN
THE THANJAVUR STRUCTURALS

S. MOHAMED RAFI
MAHARAJA SILK HOUSE

V.S. VASAN
ANAND MODERN RICE MILL

Dr. S.P.S. ARUL DOSS
GNANAM SCHOOL OF BUSINESS & HOTEL GNANAM

N.T. BALASUNDARAM
NOBLE BUILDERS

தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

S. PANDURANGAN
NEW KRISHNA SWEETS

A. GANESAN
TAX PRACTITIONER

CT. RAMANATHAN
APPAR BOOK STALLS

S. MUTHIAH
SRI MEENAKSHI PHARMA

K.P. ARIVANATHAM
MORNING STAR SCHOOL

S. ANNADURAI
ACB CHAMBER BRICKS

G. SENGUTTUVAN
KAY ESS ENGINEERING WORKS

S. MANICKAVELPANDIAN
PILLAI &SONS COMPANY

P.M. SUBRAMANIAN
SOLAR AGROS GROUPS

G. MANIVANNAN
QUALITY FOODS

T. SHANMUGAM
ALAMELU MEDICALS

A.N. VISWANATHAN
VISWAM MEDICALS

ST. RAMANATHAN
SARASWATHI TRANSPORTS

S. JAYACHANDRAN
SRI AMMAN AGENCIES

S. VIJAYARAGHAVAN
THANJAI PROPERTY

நியமிக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

Er. N. MANIMARAN
BS BUILDERS

R. VIJAYAKUMAR
SUDHA TRAVELS

Er. S. ARUL SELVA PANDIAN
PANDIAN BUILDERS

R. GUNASEKARAN
GANDHI RICE SHOP

RAMASAMY UDAYAPPAN
MEENAKSHI CORPORATION

CHAMBER of COMMERCE & INDUSTRY THANJAVUR

LIST OF CCI THANJAVUR COMMITTEES, COMMITTEE CHAIRS AND COMMITTEE MEMBERS APPOINTED IN THE EC MEETING HELD ON 01/05/2022 AT HOTEL GNANAM, THANJAVUR.

LIST OF COMMITTEES

I. By-Law Committee

Chairman – PP. Dr. S. P. S. Arul Doss
EC Member – A. Subramaniam
General Body Member – CA. V. Raj Kumar

II. Legal Committee

Chairman – PP. B. Ravikumar
EC Member – A. Subramaniam
General Body Member(s) – A. Sundaranarayanan

III. Public Relations Committee

Chairman – IPP N. T. Balasundaram
EC Members – K. P. Arivanatham, ST. Ramanathan
General Body Member(s) – B. Vijayan, C. Sathiya Moorthy, P. Marimuthu,

IV. Conference and Celebrations Committee Chairman

Chairman – PP. S. Mohammed Rafi
EC Members – Er. N. Manimaran, R. Gunasekaran
General Body Member(s) – G. Karthikeyan,

V. Audit and Statutory Compliance Committee

Chairman – PP. CA. M. Tamizhiah
EC Members – A. Ganesan, CT. Ramanathan
General Body Member(s) – CA.K. Visakhan

VI. Newsletter & E-Communications

Chief Editor & Chairman – President P. Maravarman
EC Members – CA A. Guhaneswaran, S. Vijayraghavan
General Body Member – V. Rathinasabapathy

VII. Tours and Industrial Visits

Chairman – PP. V. S. Vasan
EC Members – R. Sivakumar (Joint-Secretary)
General Body Member(s) – Er. Albert Suresh, M.Shankar

VIII. New Member Development and Member Services

Chairman – PP. PL. A. Chidambaram
EC Members – T. Shanmugam, S. Muthiah, G. Senguttavan,
General Body Members – PR. S. Radhakrishnan

IX Reconciliation and Mediation Committee

Chairman – PP.K. Padmanabhan
Members- PP. N. Meyappan, Adv. S. Manickavel Pandian

SPECIAL ACTION GROUP PANELS

I. Panel on Training and Skill Development

Convenor – PP. A. Alagappan

Members – K.P. Arivanantham, T. Venkatesan, Mrs.Punitha Ganesan, Vijaimithra

II. Panel on Business Law, Commercial Taxes, Statutory Compliance & Business Finance

Convenor – CA. C. Thamizhiah

Members – CA. S. Venkatraman, CA V. Rajkumar, CA. P. Palanisamy,
Auditor T. Mahendran, A. Subash

III. Panel on Manufacturing and Process Industries

Convenor – S. Manivannan

Members – S. Mouleeswaran, G. Senguttavan, S. Annadurai, V. Rathinasabapathy

IV. Panel on Wholesale Distribution and Trading

Convenor – PP. B. Ravikumar

Members – S. Jayachandran, P.M. Subramaniam

V. Panel on Retail & Direct-to-Customer Marketing

Convenor – M. S. Asif Ali

Members - N. Srinivasan, G. Subramaniam (PPDS Dinesh), R. Nehru Dasan

VI. Panel on F&B, Hospitality & Tourism

Convenor – Dr. S.P.S Arul Doss

Members – R. Vijayakumar, S. Pandurangan, Er. S. Muthukumar, S. Palaniappan,
TSR Aravinthan

VII. Panel on Entrepreneurship & New Generation Business

Convenor: A. Subramaniam , Vice President

U. Ramasamy, Ranjeeth, Antony Anand, G. T. Maharaja, M. Mahesh Kannan,
V. Subramaniam, R. Venkatesh

VIII. Panel on Real Estate Development, Construction, Fabrication, and Building Supplies

Convenor: PP.K. Padmanabhan

Members: Er. S. Arulselvapandian, Er. R. Pandian, Arch. Keiser Arul Anand,
Arch. K. Manonmani, T. Palaniappan , R. Suriyakumar,

IX. Panel on Health, Fitness and Insurance

Convenor – Dr. M. Singaravelu

Members: R. Nehru Dasan, M. Jeevanantham, A. Arokiasamy, R Venkatachalapathi

The Office Bearers shall be ex-officio members of all committees and panels herein constituted.

இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை செலுத்தும் BIENNIAL CONTRIBUTION ரூ.1000/

2022 -2024 ஆம் ஆண்டுக்கான இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை **Biennial Contribution** தொகை ரூபாய் 1000/- செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்தத் தொகையினைச் செலுத்தியவர்களுக்கு மனமார்ந்த நன்றி.

1. Chamber of Commerce & Industry Thanjavur என்ற பெயருக்குச் செக் மூலமாகவோ அல்லது பணமாகவோ பொருளாளர் அவர்களிடம் செலுத்தலாம்.
2. Chamber of Commerce & Industry A/c க்கு வங்கியின் மூலம் தொகையினைச் செலுத்தும் விவரம்.

A/c Name : **Chamber of Commerce & Industry, Thanjavur.** A/c No. : **35734970260**
Bank Name : **State Bank of India (SME), Thanjavur.** IFSC No. : **SBIN0012806**

கடந்த 2019- ஆம் ஆண்டு வரையிலும் உலகப் பொருளாதாரத்தில் இரட்டை இலக்கு வளர்ச்சிதான் அதிகமாகப் பேசப்பட்டது. அப்போதுதான் 5 டிரில்லியன் டாலர் வளர்ச்சியை எட்டுவது என்ற அறிவிப்பைப் பிரதமர் மோடி வெளியிட்டார். அவருடைய எண்ணம் சிறந்ததாக இருந்தாலும், அதன் பிறகு 2019 - 20, 2020 - 21, 2021 - 22 ஆகிய 3 ஆண்டுகளில் இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி விகிதம் மிகவும் குறைந்த நிலையில் இருந்தது. இதற்குக் கரோனா பரவலின் தாக்கம், இந்தியாவில் முதலீடு செய்த வெளிநாட்டு நிறுவனங்கள் பெரும்பாலானவை வெளியே சென்றது, நம் நாட்டிலுள்ள நம்பிக்கை தரக்கூடிய பொதுத் துறை நிறுவனங்களை விற்பனை செய்வதாக அறிவித்தது ஆகியவையே காரணம்.

5 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்டுவது கடினம்

மாண்புமிகு ச.சு. பழனிமாணிக்கம்
(தஞ்சாவூர் நாடளுமன்ற உறுப்பினர்)

10 ஏப்ரல் 2022

தஞ்சாவூரில் ஏப்ரல் 10, ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தஞ்சாவூர் தொழில் மற்றும் வர்த்தக சங்கத்தின் 35- ஆம் ஆண்டு பொதுக் குழுக் கூட்டத்தில் தஞ்சாவூர் மக்களவைத் தொகுதி உறுப்பினரும், முன்னாள் மத்திய நிதித்துறை இணை அமைச்சருமான எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் பங்கேற்று, அவர் மேலும் பேசியது.

கடந்த 2004- ஆம் ஆண்டில் மத்தியில் மன்மோகன்சிங் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்தியாவின் வளர்ச்சி அசுர வேகத்தில் இருந்தது. மன்மோகன் சிங் அரசு ஆட்சியை விட்டு 2014 ஆம் ஆண்டில் இறங்கியபோது பொருளாதார வளர்ச்சி விகிதம் 9.5 சதவிகிதத்தை எட்டியது. அப்போது ஏற்பட்ட சூழல் நிகழாமல் இருந்திருந்தால், 10 சதவிகிதத்தைக் கடந்திருப்போம்.

அதன் பிறகு மோடி ஆட்சியில் மொத்த விற்பனை குறியீட்டுக்கும், சில்லறை குறியீட்டுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை மாற்றியதையும், பண மதிப்பிழப்பு நடவடிக்கையையும் மேற்கொள்ளாமல் இருந்திருந்தால், பொருளாதார வளர்ச்சியில் முன்னேறியிருக்கலாம். மன்மோகன் சிங் காலத்திலிருந்து அன்னியசெலாவணி உறுதியாக இருப்பதால்தான், இந்த அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு ஈடுகொடுக்கிறது.

இப்போதைய சூழ்நிலையில் நிகழ் காலாண்டில்தான் ஜிஎஸ்டி வசூல் உச்சக்கட்டத்தை எட்டியது. இதே நிலை தொடர்ந்தால், 2025- ஆம் ஆண்டில் 5 டிரில்லியன் டாலரை எட்ட முடிந்தாலும் கூட, சர்வதேச அளவில் அமெரிக்க டாலரின் மதிப்புக்கு நம்முடைய இந்திய ரூபாய் மதிப்புக்கு ஈடுகொடுக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் பலன் கிடைக்கும். அதுவும் கூட 2025- ஆம் ஆண்டில் எட்டுவது சிரமம். 2026, 2027- ஆம் ஆண்டுகளில்தான் எட்ட முடியும். இதனால் நாம் தளர வேண்டியதில்லை. உலகில் எல்லா நாடுகளிலும் பொருளாதார தேக்கம் நிலவுகிறது.

ஐந்து டிரில்லியன் டாலர் இலக்கில் இப்போது 2.50 டிரில்லியன் டாலரைத்தான் எட்டியுள்ளோம். இன்னும் இரு ஆண்டுகளில் எவ்வளவுதான் பாடுபட்டாலும் நம்மால் எட்டுவது கடினம் என்றாலும், சூழல்கள் நமக்குச் சாதகமாக மாறுவதால் வாய்ப்புகள் இருப்பதாக நம்புவோம் என்று சிறப்பான ஒரு உரையை மாண்புமிகு திரு எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் அவர்கள் உரையாற்றினார்.

தஞ்சாவூர் தொழில் மற்றும் வர்த்தக சங்கம்

பதவியேற்பு விழா : 01.05.2022 ஞாயிற்றுக்கிழமை

தலைவர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் 01.04.2022 முதல் சங்கத்தின் பொறுப்பாளர்களாகத் தங்கள் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார்கள். தஞ்சாவூர், அண்ணாசாலையில் உள்ள ஹோட்டல் ஞானத்தில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில், **பாரத ஸ்டேட் வங்கி மண்டல மேலாளர்** திரு. **A.ஆல்வின் மார்டின் ஜோசப்** அவர்கள் சில தவிர்க்க முடியாத காரணத்தினால் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள இயலவில்லை. அவருக்குப் பதிலாக **பாரத ஸ்டேட் வங்கியின் முதன்மை மேலாளர் திரு. S.கிருஷ்ண சுப்ரமணியன்** அவர்கள் கலந்து கொண்டு சிறப்பான உரையை நிகழ்த்தினார்கள். பதவியேற்பு நிகழ்ச்சியில் சங்கத்தின் முன்னாள் தலைவர்கள், சங்க உறுப்பினர்கள், உறுப்பினர்களின் குடும்பத்தார்கள், தஞ்சை மாநகரின் முக்கிய பிரமுகர்கள், பத்திரிக்கையாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தார்கள்.

பொறியாளர் N.T.பாலசுந்தரம் பழ.மாறவர்மன் அவர்களைத் தஞ்சாவூர் CCI-ன் புதிய தலைவராகப் பதவி பிரமாணம் செய்து வைக்கிறார்

உடனடி முன்னாள் தலைவர் பொறியாளர் N.T.பாலசுந்தரம் அவர்களின் செயல்பாட்டினைப் பாராட்டிப் பாராட்டு மடல் வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது

பதவியேற்பு நிகழ்ச்சியின் போது 2022 - 2024ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகக்குழு

பதவியேற்பு விழாவின் போது தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் மாண்பமை சண். இராமநாதன் அவர்களுடன் தஞ்சாவூர் தொழில் மற்றும் வர்த்தக சங்கத்தின் புதிய நிர்வாகக் குழுவினர்

தஞ்சாவூர் தொழில் மற்றும் வர்த்தக சங்கத்தின் நிர்வாகிகள் செயற்குழுக் கூட்டம்

முன்னாள் தலைவர் திரு. A.அழகப்பன் அவர்கள் கமிட்டி உறுப்பினர்களிடையே உரையாற்றுகிறார்

கமிட்டி தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்ட கமிட்டி கூட்டம்

“நம்ம ஊரு தஞ்சாவூர் - வளர்ச்சியும் வழிகளும்”

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் தொழில் மற்றும் வர்த்தக வளர்ச்சிக்கான கருத்துரு மனுவை தலைவர் **பழ.மாறவர்மன்** அவர்கள் மாண்புமிகு **அன்பில் மகேஷ் பொய்யாமொழி** அவர்களிடம் வழங்குகிறார். உடன் செயலர் **அ.குகனேஸ்வரன்** அவர்கள், திட்டக்குழு உறுப்பினர் **S.ஆசிப் அலி** அவர்கள், **தஞ்சை சட்டமன்ற உறுப்பினர்** அவர்கள் மற்றும் **துணை மேயர்** அவர்கள்

தஞ்சாவூரில் விவசாய விளைபொருள் வீணாவதைத் தடுக்க சேமிப்புக் கிடங்கு அமைக்க வேண்டும் என தஞ்சாவூர் தொழில் மற்றும் வர்த்தக சங்கத்தின் சார்பில் நம்ம ஊரு தஞ்சாவூர் – வளர்ச்சியும், வழிகளும் என்கிற சிறப்புக் கூட்டம் 05.06.2022, ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது.

இதில் விவசாய விளை பொருள்கள் வீணாவதைத் தடுக்க சேமிப்புக் கிடங்குகளையும், குளிர்சாதன வசதியுடன் கூடிய சேமிப்புக் கிடங்குகளையும் அமைக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சிறு, நடுத்தர உணவு பதப்படுத்தும் தொழில்சாலைகளை உருவாக்க வேண்டும். தஞ்சாவூருக்கு விமான வசதி செய்து தர வேண்டும். திருச்சி – மயிலாடுதுறை இடையே ஒரு மணிநேரத்துக்கு ஒரு ரயில் வீதம் இயக்க வேண்டும்.

தஞ்சாவூர் – திருச்சி தேசிய நெடுஞ்சாலையைத் தொழில் வளர்ச்சிப் பாதையாக அறிவித்து, தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்தும் விதமாகச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அறிவிக்க வேண்டும். தஞ்சாவூரில் விவசாயப் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும்.

தஞ்சாவூர் கைவினைப் பொருள்களுக்கான தொழில் மையத்தை ஏற்படுத்தி, தஞ்சாவூரைத் தனித்துவமான உற்பத்தி மையமாக மாற்றி, பொருளாதார மேம்பாட்டுக்கு வகை செய்ய வேண்டும். தஞ்சாவூரில் சுற்றுலா வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்தால் அரசுக்கு வருவாய் அதிகரிக்கும். மேலும் அந்தந்த பகுதிக்குச் சுற்றுலா சிறப்பு நிலையை வழங்க வேண்டும். கிழக்கு ஆசிய நாடுகளைப் போன்று உணவுத் தெருவை உருவாக்கினால், அனைவரது கவனத்தையும் ஈர்த்து புதிய தொழில் முனைவோர்கள் உருவாக வழி ஏற்படும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய அறிக்கையைப் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியிடம் தொழில் மற்றும் வர்த்தக சங்க நிர்வாகிகள் வழங்கினர். இதையடுத்து, அமைச்சர் பேசுகையில், இக்கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

இக்கூட்டத்துக்கு சங்கத் தலைவர் பழ.மாறவர்மன் தலைமை வகித்தார்.

நம்ம ஊரு தஞ்சாவூர் – வளர்ச்சியும் வழிகளும் நிகழ்ச்சியில் உரையாற்றும் தஞ்சை சட்டமன்ற உறுப்பினர் திரு **T.K.G. நீலமேகம்** அவர்கள் மற்றும் மாநகராட்சி துணை மேயர் **மரு.அஞ்சுகம் பூபதி** அவர்கள்

தஞ்சாவூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம், துணை மேயர் அஞ்சுகம் பூபதி ஆகியோர் கலந்துக் கொண்டு தஞ்சாவூர் வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் செயல்படுவோம் என்று வாக்களித்து பேசினார்கள்.

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் தொழில் மற்றும் வர்த்தக வளர்ச்சிக்கான கருத்துரு

1, தஞ்சை,உலக வரைபடத்தில் ஒரு முக்கிய நகரமாக உள்ளதால் தஞ்சை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளின் வளர்ச்சிக்காகத் தஞ்சைக்கு வானூர்தி வசதி செய்யப்பட வேண்டும். U D A N திட்டத்தின் மூலம் தஞ்சையைப் பல மண்டலங்களுடன் இணைக்க மாநில அரசு மத்திய அரசின் உதவியுடன் தஞ்சையை உள்நாட்டு வான்பயண அமைப்பின் கீழ் கொண்டு வர வேண்டும்.

2.திருச்சி-மயிலாடுதுறைக்கு இடையில் ஒரு மணிநேரத்துக்கு ஒரு தொடர்வண்டி சேவை வழங்க DEMU தொடர்வண்டிகளை வழங்க வகை செய்ய வேண்டும். இதன் மூலம் டெல்டா மாவட்டங்களின் விளை பொருட்கள் எளிதில் பிற இடங்களுக்குச் சென்றடையும். சாலை போக்குவரத்து இடர்ப்பாடும் குறையும். தஞ்சையில் இருந்து சென்னைக்குப் புதிய இரயில்கள் விட வேண்டும்.

3 . விவசாய தொழில்முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு அமைப்புகளை தோற்று வித்து ட்ரோன்கள், நீர் மேலாண்மை மற்றும் மாற்றுப்பயிர்கள் ஆகியவற்றின் மூலம் சிறந்த விவசாயத் தொழில் முனைவோர் களையும் விவசாய திறன்மிகு தொழிலாளர் களையும் உருவாக்க வேண்டும். விவசாய சந்தைகளில் எல்லா விளைபொருட் களுக்கும் கட்டுப்பாடற்ற சந்தையை ஏற்படுத்தி விவசாயிகளுக்குத் தங்களின் விளைபொருட்களுக்கு மிகச்சிறந்த விலை கிடைக்க வகை செய்யவேண்டும்.

4. விவசாய விளை பொருட்கள் வீணாவதைத் தடுக்க சேமிப்புக் கிடங்குகளையும், குளிர்சாதன வசதியுடன் கூடிய சேமிப்புக் கிடங்குகளையும் தோற்றுவிக்க வேண்டும்.

5. சிறு, நடுத்தர உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

6. தஞ்சாவூர்-திருச்சி தேசிய நெடுஞ் சாலையைத் தொழில் வளர்ச்சி பாதையாக (Industrial corridor அறிவித்து, தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்த அதைச் சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவிக்கவேண்டும்.

7. தஞ்சையில் விவசாயப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவிக்கவேண்டும்.

8. நகரின் மையத்தில் உள்ள ரயில்வே சரக்கு கையாளும் வளாகத்தை, வடவாறு ரயில் நிலையத்துக்கு மாற்றுவதன் மூலம், தஞ்சை நகருக்குள் கனரக வாகனங்களின் போக்குவரத்தை குறைக்கலாம்.

9. கைவினை பொருள்கள், விளக்குகள், தஞ்சாவூர் பெயின்டிங், வெண்கலச் சிலைகளுக்குத் தொழில் மையத்தை ஏற்படுத்தி தஞ்சாவூரைத் தனித்துவமான உற்பத்திக் கேந்திரமாக மாற்றி பொருளாதார மேம்பாட்டுக்கு வகை செய்ய வேண்டும்.

10. உணவு மற்றும் உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு அடுத்து தஞ்சையின் சுற்றுலா வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்தால் அரசுக்கு வருவாய் அதிகரிக்கும். மேலும் அந்தந்தப் பகுதிக்குச் சுற்றுலா சிறப்பு அந்தஸ்தையும் வழங்க வேண்டும். பெரிய கோயில் வளாகத்தில் பொன்னியின் செல்வன் சிறப்பு ஒளி ஒலிக்காட்சி ஏற்படுத்த வேண்டும்.

11.பெரியகோயிலுக்கு அண்மையில் உள்ள அரசு பணிமனையை வாகன நிறுத்துமிடமாக மாற்றலாம். பெரிய கோயில் அகழியானது சிறப்பு நகரச் (Smart city) செயல்பாட்டில் விடுப்பட்டுள்ளது. புது ஆற்றில் நீர் வரும் பொழுது அகழியில் தண்ணீர் இருந்தால் அண்மையில் உள்ள சீனிவாசபுரம், மேலவீதீ மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் பூமியின் நீர் மட்டம் உயரும்.

12.கிழக்கு ஆசிய நாடுகளைப் போல் உணவுத் தெருவினைத் (Food street) தோற்று வித்தால், அது அனைவரின் கவனத்தை ஈர்த்து புதிய தொழில் முனைவோர்கள் உருவாக வழி உண்டாகும்.

13. சர்வதேச சுற்றுலா பயணிகளுக்குத் தேவையான கழிப்பிட வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை மேலைநாடுகளில் உள்ளதுபோல சுற்றுலா வசதிகள் மேம்படுத்த வேண்டும்.

14. சீனிவாசபுரத்துக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில் மேம்பாலம் ஏற்படுத்தி சாலை இணைப்பை உருவாக்க வேண்டும். ரெட்டி பாளையம் சாலையை விரிவாக்க வேண்டும்.

15. பாரம்பரிய சட்டத்தை(Heritage law) அமல்படுத்துவதன் மூலம் கோயிலுக்கு எதிரில் உள்ள குந்தவை நாச்சியார் மருத்துவமனையில் உள்ள பழைய O G தொகுதி மற்றும் நர்சிங் பயிற்சி அரங்கு ஆகியவற்றைப் பாதுகாக்க முடியும்.

16. மருத்துவக்கல்லூரி சாலையின் மையத் தடுப்பு பகுதியை நெறிப்படுத்தி மேம்படுத்த வேண்டும். மையத் தடுப்பானது கீழ்ப்பகுதி 75 cm ஆகவும் மேல்பகுதி 25 cm ஆகவும் 2 ½ அடி உயரம் உள்ளதாகவும் அமைக்க வேண்டும்.

17. நகரில் உள்ள பூங்காக்களில் எளிதில் அனைவரும் பார்க்கும் வகையிலான சுற்றுச்சுவர் எடுப்பதன் மூலம் சட்டத்திற்குப் புறம்பான செயல்கள் பூங்காக்களில் நடப்பதைத் தவிர்க்கலாம். ராஜப்பா பூங்காவின் சுற்றுச்சுவர்களை RMH வளாகம் வரை நீட்டிக்க வேண்டும்.

18. நகரின் முக்கிய சாலை சந்திப்புகளில் போக்குவரத்து தீர்வு ஏற்படுத்த வேண்டும்.

19. சாலையில் சுற்றித்திரியும் ஆடு மாடுகள் நாய்களைப் பிடித்து அடைக்கும் நவீன பட்டிகளை ஏற்படுத்த வேண்டும்

20. மின் மயானம் முறையாகச் செயல்படுத்த வேண்டும்

21. சீனிவாசபுரம், மேலவீதி, தெற்கு அலங்கம் சந்திப்பில் உள்ள நேதாஜி பூங்காவை மேம்படுத்த வேண்டும் ரவுண்டானா அமைப்பதன் மூலம் போக்குவரத்து நெரிசல்களையும் விபத்துக் களையும் தவிர்க்கலாம்.

22. பிலோமினா நகரின் 5 தெருக்களும் தஞ்சாவூர் மாநகராட்சி, நாஞ்சிக்கோட்டை பஞ்சாயத்தின் எல்லைப்பகுதியில் உள்ளது. அங்குச் சாலை வசதி போன்ற மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மாநகராட்சியுடன் இணைக்க வேண்டும்.

23. மாரியம்மன் கோயில் அண்மையில் உள்ள சமுத்திரம் ஏரி தூர் வாரப்பட்டு, அகலப் படுத்தப்பட்டு, ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும். அந்த ஏரியில் படகு சவாரி ஏற்படுத்துவதன் மூலம் மிகப் பெரிய சுற்றுலா வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். அது போன்ற முயற்சி ஏற்கனவே பொதுப்பணித் துறையில் உள்ளது. இதை விரைவாகச் செயல்படுத்த வேண்டும்

24. குடிநீர் வசதி, முதியோர்கள் அமர இருக்கை வசதி போன்ற வசதிகளைப் புதிய பேருந்து நிலையத்தில் ஏற்படுத்த வேண்டும்.

25. தஞ்சை ரயில் நிலையத்தில் பயணிகளின் வசதிக்காக எல்லா நடை மேடைகளிலும், உணவகம், செய்தித்தாள் அங்காடிகள் திறக்கப்பட வேண்டும். இதை நடத்திக் கொண்டிருந்தவர்களுக்கு வாடகை பல மடங்கு அதிகரிக்கப்பட்டதால் அவர்களால் அதை நடத்த இயலாமல் போய்விட்டது.

26.தஞ்சை நகரின் முக்கிய இடங்களில் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் டிஜிட்டல் போர்டுகள் வைத்து நகராட்சி திட்டங்களை அறிவிக்கலாம். விளம்பரங்கள் மூலம் செலவுத் தொகையை ஈடுகட்ட வருமானம் ஈட்டலாம்.

27. எல்லா பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் NSS, NCC, லியோ சங்கங்கள், செஞ்சிலுவைச் சங்கங்கள் செயல்படுவதைப் போல் தொழில் முனைவோர்களாக குழந்தைகளை உருவாக்க 'இளம் தொழில் முனைவோர் சங்கம்' ஏற்படுத்த வேண்டும்.

28. போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள நகரின் முக்கிய சாலைகளில் அமைந்துள்ள டாஸ்மாக் கடைகளை இடம் மாற்றம் செய்ய வேண்டும்.

29. நகரின் எல்லா வார்டுகளிலும் உள்ள பூங்காக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டு பூங்காக்களாக மாற்ற வேண்டும்.

30. தஞ்சை நகரின் எல்லா பஸ் நிறுத்தங்களும் நேர் எதிர் எதிராக அமைந்து போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது. அவைகளை மாற்றி அமைக்க வேண்டும்.

31. பெரிய கோயில் அருகில் உள்ள அரசுப் போக்குவரத்துப் பணிமனையில் சிறுவர் களுக்கான போக்குவரத்துப் பூங்கா அமைய இருக்கிறது. குழந்தைகளும், மாணவர்களும் அதிக அளவில் விடுவது, போக்குவரத்து நெரிசலையும், குழந்தைகளும் ஆபத்தையும் ஏற்படுத்தும். எனவே போக்குவரத்துப் பூங்காவினை பாதுகாப்பான இடத்திற்கு மாற்றி அமைக்க வேண்டும்.

32. மருத்துவக்கல்லூரி மருத்துவ சிகிச்சைக்காகச் செல்ல வருபவர்கள் புதிய பேருந்து நிலையத்திற்கு ரகுமான் நகர் வழியாக போதிய நகரப் போக்கு வரத்துகளை இயக்க வேண்டும்.

33. மக்கள் விரைவாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செல்ல புதிய பேருந்து நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குத் தேவையான பேருந்து வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

34. தஞ்சை மாவட்ட மைய நூலகத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டும். புதிய கட்டட வளாகத்தைக் கட்டமைக்க வேண்டும். போட்டித் தேர்வுகளுக்குப் பயிற்சி பெறும் மாணவர்கள் இதனால் பயனடைவார்கள்.

35. தஞ்சை நகர - மாவட்ட வளர்ச்சித் திட்டங்களின் ஆலோசனைக் கூட்டங்களில் பங்கேற்பதற்குத் தஞ்சாவூர் தொழில் மற்றும் வர்த்தக சங்க பிரதிநிதிகள் நியமிக்கப்பட வேண்டும்.

36. நகரில் உள்ள கீழ்ப்பாலத்தில் மழை காலத்தில், மழை நீர் தேங்கி மிகப்பெரிய பிரச்சினையைத் தோற்றுவிக்கிறது. அதை முறையாக ஆய்வுச் செய்து, உடனடியாக மாற்று யோசனையைச் செயல்படுத்த வேண்டும்.

37. தஞ்சை பட்டுக்கோட்டை சாலையில் கீழவஸ்த்தா சாவடியில் மாவட்ட கலெக்டர் அவர்களால் சமீபத்தில் கையகப்படுத்தப்பட்ட அரசு நிலத்தில் ஒரு பஸ் நிலையம் அமைக்கப்பட்டால் நகருக்குள் பெருவாரியான தேவையற்ற நெரிசல் குறைந்து விடும்.

38. தொல்காப்பியர் சதுக்கம் to ராமனாதன் ஆஸ்பத்திரி ரோடு ஒரு வழி சாலை ஆக்கப்பட்டால்,கீழவாசல் to தொல்காப்பியர் சதுக்கம் ஒரு வழி சாலை ஆக்கப்பட்டால் நகரம் மிக சிறப்பாக மாறிவிடும்.

39. தமிழக அரசின் நிதி நிலை அறிக்கையில் தெரிவித்தவாறு தஞ்சாவூர் இல் Mini Tidel Park அமைக்க அமைச்சர் அவர்கள் உதவிட வேண்டும்

40. மேரிஸ் கார்னர் வழியாக நாகை சாலையை இணைக்கும் புதிய மேம்பாலம் தவறான முறையில் கட்டமைக்கப்பட்டதால் பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் அச்சுறுதலாக உள்ளது, அதனைச் சரி செய்ய நிபுணர் குழு அமைக்க வேண்டும்

41. சுற்றுலா மேம்பாட்டிற்காகத் தஞ்சாவூர் குறித்த செய்திகளுடன் bye pass சாலையில் பதாகைகள் நிறுவ வேண்டும். இதன் மூலம் தஞ்சாவூர் மக்களின் பொருளாதாரம் உயரும்.

• • •

வருந்துகிறோம்

திரு. டி.ஜி. வெங்கடாசலம்
முன்னாள் தலைவர்

திரு. ஆர். சுப்புராமன்
உறுப்பினர்

திரு. எஸ். சுப்பையன்
உறுப்பினர்

உங்கள் மறைவால் தஞ்சாவூர் தொழில் மற்றும் வர்த்தக சங்க உறுப்பினர்கள் அனைவரும் மிகவும் வருந்துகிறோம. உறுப்பினர்கள பிரிவால் வருந்தும் குடும்பத்தினர் அனைவருக்கும் ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ப்ராண்ட் உருவாக்க எட்டு படிகள்

திரு. சதீஷ் கிருஷ்ணமூர்த்தி

• ஆலோசகர் • கட்டுரையாளர் • பயிற்சியாளர்

13 ஜூலை, 2022

Brand is an idea and it should be consumer focussed said Satheesh Krishnamurthy, brand consultant here on Wednesday the 13th July 2022.

Speaking about eight steps to create a brand at the Chamber of Industry and Commerce here, he said that brand should also be unique, different and relevent.

